1971 ஜூலை 21]

கூடிய வகையில் இடங்கள் அமைக்க அரசு முன்வருமா, அப்படிப் பட்ட திட்டம் ஏதேனும் அமைச்சர் வைத்து இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவரவர்களே, இன்று கொடைக்கானல் போன்ற மற்ற இடங்களில் பள்ளிக்கூடம் சம்பந்தப்பட்ட உணவு விடுதிகளையும் ஹாஸ்டல்களையும் எடுத்து, அதைக் கோடைக்காலங்களிலே வரும் பயணிகளுக்கு வழங்கலாம் என்ற திட்டத்தை அரசு மேற்கொள்கிறது. மத்திய அரசு ரூ. 25 கோடி இந்தச் சுற்றுலாத் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில் தென் மாநிலத்திற்கு என்று தனியாக எந்தத் தொகையும் ஒதுக்கப்படவில்லை. அதை அந்த மாநிலத்தில் கூறி, தென் மாநிலங்களுக்கு ரூ. 7 அல்லது ரூ. 10 கோடி வரை ஒதுக்கி, அந்தந்த மாநிலத்தில் உள்ள மக்கள், உள்நாட்டிலே பயணம் செய்யும் மக்களுக்கு வசதிகளைச் செய்து தரும் காரியங்களைச் செய்வதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Bonus for workers of State Transport Service

* 361. Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) whether a section of the workers of the State Transport Service have not been paid bonus for 1970-71; and

(b) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறையில் அக்டோபர் தொடங்கி செப்டம்பர் முடிய உள்ள காலப் பகுதிக்குப் பூரிப்பூதியம் வழங்கப்படுகிறது. 1969 அக்டோபரில் தொடங்கி 1970 செப்டம்பரில் முடிந்த பூரிப்பூதிய ஆண்டிற்கு எல்லாத் தொழிலாளர்களுக்கும் பூரிப்பூதியம் வழங்கப்பட்டுள்ளது. 1970 அக்டோபரில் தொடங்கி 1971 செப்டம்பரில் முடியும் ஆண்டுக்குரிய பூரிப்பூதியத் தொகை பற்றித் தக்க தருணத்தில் அறிவிக்கப்படும்.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திருப்பரங்குன்றம் தேவஸ்தானம்.

* 362 வினா—திரு. சொ. காவேரிமணியம் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பரங்குன்றம் தேவஸ்தானத்தை தனி தேவஸ்தானமாக ஆக்க, அறநிலையப் பாதுகாப்பின் நிர்வாகத்தின் கீழ் எடுத்துக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) அது அரசின் பரிசிலனையில் உள்ளது